ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1415 / 5 – 2005 ඔක්තෝබර් 18 වැනි අඟහරුවාදා – 2005.10.18
1415 / 5 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III – காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : ப/கா/3/1.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியிருக்கிறது என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் : –

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பண்டாரகமை பிரதேச செயலாளர் பிரிவில், பாணந்துறை தோட்டமுனை சிறு பிரிவில், மஹாவில கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட 22.07.2005 ஆம் திகதிய, ஆரம்ப வரைபட இல. கா: 3477 இல் துண்டு இல. 97 எனக் காட்டப்பட்ட சுமார் 0.0045 ஹெக்டயார் மொத்த விஸ்தீணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட ஒரு (01) காணித் துண்டு.

01. **துண்டு இல. 97**

காணியின் பெயர் : டெல்கஹவத்தை கும்புர ; விபரம் : நெல் வயல் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : எம்.டீ. சரத் பெரேரா, ஹொரணை வீதி, மஹாவில, பாணந்துறை ; விஸ்தீரணம் : 0.0045 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2005 ஆம் வருடம் நவம்பர் மாதம் 07 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பண்டாரகமை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும், குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2005 ஆம் வருடம ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி.ஏ.எம்.பீ.அபேரத்ன,
பிரதேச செயலாளர்,
பண்டாரகமை.

பிரதேச செயலகம்
பண்டாரகமை.
2005.06.12.

10 – 08